பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை 22.09.2024 கதிர் 319



## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் முடிந்துவிட்டது. வெற்றியின் காற்று அநுரகுமார திஸநாயக்கபக்கம்தான்சாயும்என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. முதல்வாக்குளண்ணிக்கையில் ☞2

# அநுர வெற்றிநடை

## முடிவு அறிவிக்கப்பட்ட உடனேயே பதவியேற்பார்

**2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நேற்று நள்ளிரவு முதல்வெளியாகிவரும்நிலையில்தேசியமக்கள்கூட்டணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க வெற்றிபெறுவார் என்பது அனேகமாக உறுதியாகி வருகின்றது. அதிகாலை 4 மணிவரையில் வெளியாகிய தபால்மூல வாக்குகளின் முடிவுகள்படியும் தொகுதிவாரியான முடிவுகளின்படியும் அநுரகுமாரவே முன்னணியில் இருக்கின்றார்.**

**எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக அநுரகுமார 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று முதல் வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையிலேயே ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக தேர்தல் அவதானிகள் கருதுகின்றனர். அதிகாலைவரை வெளியான உத்தியோகபூர்வ முடிவுகளில் அவர் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார்.** ☞2



## காலை 6 மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுல்

நாட்டிலுள்ள சகல நிர்வாக மாவட்டங்களிலும்பொது ஒழுங்கமைதியைப் பேணுவது அவசியமாகவுள்ளது எனக் கருதுவதால் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் ஊரடங்கு சட்டத்தைநடைமுறைப்படுத்துவதாகக் குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இன்று காலை 6 மணி வரை இந்த ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல நிர்வாக மாவட்டங்களிலும் பொது ஒழுங்கமைதியைப் பேணுவது அவசியமாகவுள்ளதென நான் கருதுகின்றேன். அதனால் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பிக்கின்றேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமையசனிக்கிழமைஇரவு10 மணிமுதல்ஞாயிற்றுக்கிழமைகாலை6 மணி வரை பாதுகாப்பு செயலாளரினால்,பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அல்லது இவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்ட எழுத்திலான அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி பொது இடங்களில் நடமாடமுடியாது ☞2

## கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

கட்டுநாயக்கசர்வதேசவிமானநிலையத்தின்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் எரந்த கீகனகே தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்லுக்கு பின்னரான காலத்தில் விமானத் தளத்தினதும், பயணிகளினதும் பாதுகாப்பை மையப்படுத்தியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டள்ளது.

அதனைவிடவும், வேறெந்த விசேட காரணங்களும் இல்லை. விமானத்தளத்தினைச் சுற்றியுள்ள ☞2



## மாவட்ட வாக்களிப்பு வீதம்

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்புநேற்றுக்காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணியுடன் நிறைவடைந்தது.

அதன்படி, நாடு முழுவதிலும் உள்ள சில மாவட்டங்களில் ☞2

## வெற்றியை அமைதியாக கொண்டாடக் கோரிக்கை

### பொலிஸார் அறிவுறுத்து

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எவ்வாறாயினும், அமைதியான முறையில் ஆதரவாளர்கள் தத்தமது வெற்றிகளைக் கொண்டாடுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ கோரியுள்ளார். ☞2

## மாற்றத்தை ஏற்படுத்துகிற தேர்தலாக இது அமையும்

### அநுரகுமார நம்பிக்கை

இலங்கையில் வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒருதேர்தலாக உள்ளதென்று தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின்ஜனாதிபதிவேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்படுவார் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று ☞2

## பொது ஒழுங்கைப் பேணவே ஊரடங்கு முறைகேடு இடபெறாதென நம்புகிறோம்

### தேசிய மக்கள் சக்தி கருத்து

தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது பொது ஒழுங்கை நிலை நாட்டும் நோக்கத்தில் மாத்திரமே ஊரடங்கு சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள தேசிய மக்கள் சக்தி, முடிவுகள் வெளியாவதில் எவ்வித முறைகேடுகளுக்கும்இடமளிக்காமல் உரியஅதிகாரிகள்பணியாற்றுவர்என எதிர்பார்ப்பதாகவும்தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றைவெளியிட்டு தேசியமக்கள்சக்திஇதனைக் ☞2

## இலங்கை மக்களின் தீர்ப்பு திருப்புமுனையாக அமையும்

### சுமந்திரன் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அளிக்கும் தீர்ப்பு திருப்பு முனையாக அமையும் என்று இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்ற நிலையில், குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமையப்பெற்றுள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தலைமையைத் ☞2

## தேர்தல் முடிவு எதுவாக இருந்தாலும் ரணிலோடு பணியாற்றியது பெருமை

### நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவு எதுவாக இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடு பணியாற்றியது பெருமிதமடைகின்றேன் என்று வெளிவிவகார மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்ற நிலையில் இதுகுறித்துதனதுஉத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும்அமைச்சர்அலிசப்ரி அதில் மேலும் கூறியிருப்பதாவது:

தேர்தல் முடிவு எதுவாக இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அணியில் ஓரங்கமாகஇருந்ததையிட்டுநான் மிகுந்தபெருமிதமடைகின்றேன். எமது நாடு மிக மோசமான நெருக்கடிக்குமுகங்கொடுத்திருந்த வேளையிலேயே அவர் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதற்கு முன்பதாகசகலரும்நம்பிக்கையை இழந்திருந்தனர். பெரும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியானாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. தபால் மூல வாக்களிப்பில்வடக்குகிழக்குமாவட்டங்களைத் தவிர்த்து மற்றைய இடங்களில் எல்லாம் அநுரவுக்கே வெற்றி கிடைத்துள்ளது.

அதிலும் இரண்டாவது இடத்தைப் பிடித்த ரணில் அல்லது சஜித்திற்கும் அநுரவுக்குமான இடைவெளி மிகப் பெரிதாக இருக்கின்றது. அது தவிர அதிகாலைவரை எண்ணப்பட்ட மற்றைய வாக்களின் அடிப்படையிலும் வடக்குகிழக்குக்கு வெளியே அநுரவுக்கு பெருமளவிலான வாக்குகள் போடப்பட்டிருக்கின்றமை உறுதியாகி இருக்கின்றது. அதனால் அநுரவின் வெற்றி பெரும்பாலும் உறுதியாகிய மாதிரித்தான். விருப்ப வாக்குத் தெரிவு எண்ணிக்கைக்குப் பின்னரா அல்லது முதல் வாக்கு எண்ணிக்கையிலேயா அவரது வெற்றி பதிவு செய்யப்படப்போகின்றது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக் காரர்களால் நிறுத்தப்பட்ட அரியநேத்திரனுக்கு கிழக்கில் பெருமளவில் வாக்குகள் விழவில்லை. யாழ்ப்பாணம் மற்றும் வன்னியிலேயே கணிசமான வாக்குகள் விழுந்துள்ளன. அரியநேத்திரனின் சொந்த இடமான மட்டக்களப்புத் தொகுதியில்கூட அவருக்கு ஆயிரத்துக்கும் குறைவான வாக்ககுகளே கிடைத்துள்ளன. இது வடக்கின் தமிழ்த் தேசிய உணர்வைவிட கிழக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்பும் வேட்கையும் வேறானவை என்பதை உணர்த்துவதாக உள்ளது. ஒழுங்காக முன்னெடுக்காத தேசியக் கட்டுமானத்தின் மூலம் இருந்ததையும் போட்டுடைத்த கதையாகியிருக்கின்றது பொதுக் கட்டமைப்பின் முன்னெடுப்பு.

யாழ். மாவட்டத்தில் நல்லூர் தொகுதியில் மட்டும் அரியநேத்திரனுக்கு 10,097 வாக்குகள் விழுந்துள்ளன. ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் முதலிரு இடங்களையும் பெறாத வேட்பாளர் ஒருவர் தேர்தல் தொகுதி ஒன்றில் வெற்றிபெற்றார் என்ற வரிசையில் இதுவரை ஜி.ஜி.பொன்னம்பலம் (1982) மற்றும் அபயகுணசேகர (1988) ஆகியோருக்குப் பின்னர் அரியநேத்திரனின் பெயரும் இடம்பிடித்திருக்கின்றது. அந்த வகையில் பொதுக் கட்டமைப்பினர் சந்தோசப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சி ஒன்றில் வரும் ''உங்கிட்ட வாங்கின காசுக்கு தென்னை மரச் சின்னத்துக்கு ஒரு குத்து, அவன்கிட்ட வாங்கின காசுக்கு ஏணிச் சின்னத்துக்கு ஒரு குத்து'' என்ற கதையாக எங்கள் மாவை சேனாதிராசாவும் நேற்று வளைத்து வளைத்துக் குத்தியிருக்கிறார். அதை அவரேதான் சொன்னார். கட்சி முடிவுக்காக முதலில் சஜித்திற்கும் இன விடுதலைக்காக அரியநேத்திரனுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வாக்களித்தேன் என்றார் மாவை.

''இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக நான் எனது முதல்வாக்கினை அளித்துள்ளேன். இரண்டாவது வாக்கினை தமிழ் பொதுவேட்பாளருக்கும் மூன்றாவது வாக்கினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அளித்துள்ளேன். தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலையைப் பெறுவதை இலக்காக் கொண்டு தமது வாக்குகளை அளிக்க வேண்டும். நான் மூவருக்கு வாக்களித்திருந்தாலும் அந்த வாக்குகள் எமது இனத்தின் விடுதலையை மையமாகக்கொண்டு அளிக்கப்பட்டவையாகத்தான் உள்ளன.

தற்போது தமிழ் இன விடுதலையை முன்வைத்து வெவ்வேறுவிதமான முடிவுகளை எடுத்தவர்கள் இந்த தேர்தலின் பின்னர் தமிழின விடுதலைக்காகவும் இலட்சியத்தை அடைவதற்காகவும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது'' என்றார் மாவை.

அரியநேத்திரனுக்கு இரண்டாவது வாக்கையும் ரணிலுக்கு மூன்றாவது வாக்கையும் வழங்கியதன் மூலம் இனவிடுதலைக்கு எப்படி அவர் பங்களித்தார் என்பதற்கு அவரேதான் விளக்கமளிக்கவேண்டும். ஏனெனில் அரியநேத்திரனுக்கு இரண்டாவது வாக்கை அளிப்பதன் மூலம் எந்தப் பயனும் இல்லை. அரியத்துக்கு முதல் வாக்கையும் சஜித்துக்கு இரண்டாவது வாக்கையும் ரணிலுக்கு மூன்றாவது வாக்கையும் வழங்கியிருந்தாலாவது அதிலொரு தர்க்க நியாயமும் இனவிடுதலை நோக்கும் இருந்திருக்கும் என்று சொல்லலாம். ஆனால் அரியத்துக்கு 2ஆவது வாக்கைப் போட்டு என்ன பயன்? அவர் முதல் இரு இடங்களைப் பெறும் வேட்பாளராக ஒருபோதும் வரப்போவதில்லை என்கிறபோது அவருக்குப் போடப்படும் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்குகளால் எந்தப் பயனுமே இல்லை. அது அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையில்கூடச் சேர்க்கப்படாது.

எவ்வளவு அறிவாளியான தலை வர் ஒருவரை தமிழ் அரசுக் கட்சி கொண்டிருந்திருக்கிறது என்பதை எண்ணுகையில் மயிர்க்கூச்செறிகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## அநுர ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால்மூலவாக்களிப்பு முடிவுகளில் வன்னி மாவட்டத்தில் சஜித் பிரேமதாசவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் வெற்றிபெற்றிருந்தனர். திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அநுரவே வெற்றிபெற்றுள்ளார். யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஏனைய வடக்கு கிழக்கு மாவட்ட முடிவுகள் வெளிவராத நிலையில் இலங்கையின் மற்றைய மாவட்டங்கள் அனைத்திலும் அநுரகுமாரவே தபால்மூல வாக்களிப்பில் வெற்றி பெற்றிருக்கிறார். அதன் பின்னர் வெளியிடப்பட்டுவரும் தொகுதிவாரியான தேர்தல் முடிவுகளின்படியும் அநுரகுமாரவே வெற்றிபெற்று வருகின்றார். எண்ணப்பட்டுவரும் வாக்குகளிலும் அநுரவே முன்னணியில் காணப்படுகின்றார்.

முதல்சுற்றுவாக்குஎண்ணிக்கையிலேயே அநுரகுமார திஸநாயக்க 50 சதவீத வாக்குகளைப் பெற்றுவிட்டார் என்றால் இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியார் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று மாலைக்குள் வெளியாகிவிடும். அந்த அறிவிப்பு வெளியான கையோடு பதவியைப் பொறுப்பேற்பதற்கான தயார்ப்படுத்தல்களில் தேசிய மக்கள் சக்தி தற்போது ஈடுபட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் அநுரகுமார திஸநாயக்கதனக்கு அடுத்த நிலையில் உள்ள வாக்காளரைவிட ஒன்றரை மடங்கு அதிக வாக்குகளைப் பெற்று முன்னணியில் திகழ்கிறார்.

## தேர்தல் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையான மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். எரிபொருள் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தார்கள்.

பணவீக்கம் கட்டுப்பாட்டை இழந்து உச்ச மட்டத்தை அடைந்தது. உரம் இமருந்துபோன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தீவிர கரிசனையைத் தோற்றுவித்திருந்தது.

இருப்பினும் அதன் பின்னரான இரு வருட காலத்தில் ஏற்பட்ட நிலைமாற்றத்தை எவ்வகையிலும் மறுக்கமுடியாது. நாடு மீண்டும் உறுதிப்பாடடைந்தது. ரூபாவின் பெறுமதி ஸ்திரமடைந்தது. பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் வருமானத்தை மாத்திரமன்றி கையிருப்பின் அளவையும் அதிகரித்தது.

அதேபோன்று கடன் மறுசீரமைப்பின் ஊடாக எமது நாட்டுக்கு சுமார் 17 பில்லியன் டொலர் சலுகை கிடைக்கப்பெற்றமை மிகப் பெரும் அடைவாகும். இவற்றைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் ஊடாக இலங்கையினால் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியையும் சுபீட்சத்தையும் நோக்கிய வலுவான பாதையில் பயணிக்கமுடியும்.

வெளியே இருந்து அனைத்தையும் விமர்சிப்பது இலகுவான விடயமாகும். ஆனால் அக்காலப் பகுதியில் பொறுப்பை ஏற்றுஇ சவால்களை உரியவாறு கையாள்வதற்கு மட்டற்ற துணிவும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதனவாகும். இப்போது திரும்பிப் பார்க்கையில் நாட்டுக்கு மிக அவசியமாக இருந்த வேளையில் நாம் பொறுப்பேற்று உரிய தீர்வினை வழங்கினோம் என்பதிலும் எமது நாட்டைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்திஎம்மிடமிருந்த அனைத்தையும் வழங்கினோம் என்பதிலும் நான் மிகுந்த பெருமிதமடைகின்றேன். தற்போது நாம் அடுத்த பகுதியை நோக்கி நம்பிக்கையுடனும் உறுதியுடனும் காத்திருக்கின்றேன் என்று தெரிவித்திருக்கிறார்

## மாற்றத்தை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற நிலையில், அபேசிங்கராமய பஞ்சிகாவத்தையில் உள்ள சைக்கோகி தொடக்கப்பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதொரு தேர்தலாக இந்தத் தேர்தல் காணப்படுகின்றது. இலங்கையில் அரசாங்கத்தினை மாற்றுவதற்கும், தலைவர்களை மாற்றுவதற்கும் ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்கும் இதுவரையில் தேர்தல்கள் வழிசமைத்துள்ளன.

ஜனநாயகத்தின் உயரிய விழுமியங்களில் மிக முக்கியமானது எந்தவொருவரும் தமக்கு விரும்பிய அரசியல் தலைவரை ஆதரிக்கவும், அவருக்கு வாக்களிப்பதற்கும், அவருடன் இணைந்து செயற்படவும் காணப்படும் உரித்துக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்.

அந்த உரித்தினை பாதுகாப்பதுடன், வாக்களிப்பின் பின்னர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வன்முறைகளிலோ அல்லது குழப்பமான நிலைமைகளோ ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது.

எமது நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் அவசியமாக உள்ளது. அரசியல் ஆதரவுக் காரணத்துக்காக வஞ்சிக்கப்பட்ட நிலைமைகள் ஒருபோதும் ஏற்படக்கூடாது. அமைதியாக பொதுமக்கள் தமது வெற்றியைக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரம், தற்போதுள்ள ஜனாதிபதி தேர்தல் முடிவுகளுக்கு அமைவாக புதிய ஜனாதிபதியிடத்தில் அதிகாரங்களை ஒப்படைப்பதோடு அவர் ஜனநாயக முறைப்படி நடந்துகொள்வார் என்றும் முடிவுகளின் பின்னர் தனது ஓய்வுகாலத்துக்குச் செல்வார் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

அதுமட்டுமன்றி, அவர் பலாத்காரமாக அதிகாரத்தை தக்கவைப்பதற்கோ, அல்லது வன்முறையான சூழலை ஏற்படுத்துவதற்கோ விளைய மாட்டார் என்பது தெளிவானதொரு விடயமாகும். மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து புதிய ஜனாதிபதிக்கு இடமளிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

## இலங்கை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கின்ற பொறுப்பு மக்களிடத்தில் இருக்கின்றது. ஆகவே மக்கள் சரியான தீர்ப்பினை அளிப்பார்கள் என்ற எதிர்பார்ப்புள்ளது. அத்துடன் இந்த ஜனாதிபதி தேர்தல் சரியானதொரு திருப்பு முனையாக இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி அல்லோலகல்லோலப்பட்டிருந்த நிலையில் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மக்களின் அபிப்பிராயம் கோரப்படுகின்றது. ஆகவே மக்கள் தமது வலுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

தேர்தலில் ஏற்படுகின்ற மாற்றமானது, நாட்டிக்கும், மக்களுக்கும் சிறந்தவொரு வழியைக் காண்பிக்கும் என்று நான் நம்புகின்றேன் என்றார்.

## மாவட்ட ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவான வாக்கு வீதங்களின் சதவீதம் கீழே,

நுவரெலியா 80% கொழும்பு 75% இரத்தினபுரி 75% குருணாகல் 75% கம்பஹா 80% புத்தளம் 78% மொனராகலை 77% பதுளை 73% பொலன்னறுவை 78% கண்டி 78% களுத்துறை 75%- புத்தளம் 75% யாழ்ப்பாணம் 67% கிளிநொச்சி 68% வவுனியா 72% மன்னார் 72% முல்லைத்தீவு 68% மட்டக்களப்பு 69% திருகோணமலை 76% அம்பாறை 70% காலி 74% அம்பாந்தோட்டை 78% கோகலை 75% அனுராதபுர 75% மாத்தளை 74%

## பொது....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

ஜனாதிபதித் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகள் வெளியாவதில் எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்காமல் மிகத் துல்லியமாகவும் தெளிவாகவும் பணிகளைச் செய்ய தேர்தல் ஆணையமும் தொடர்புடைய அதிகாரிகளும் பணியாற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய காவல்துறை உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் பணியாற்றுவார்கள் என்றும் நம்புகிறோம்.

இந்த நிலையில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவது தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது பொது ஒழுங்கை நிலைநாட்டும் நோக்கத்தில் மட்டுமே செய்யப்படுவதாக நாங்கள் நம்புகிறோம் - என்றுள்ளது.

## கட்டுநாயக்கா....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் மேலதிக வீதித்தடைகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே பயணிகள் அசௌகரியங்களை தவிர்ப்பதற்கான நேரகாலத்துடன் தமது பயணங்களை திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதுவொரு தற்காலிகமான நிலைமையே தான் என்றார்.

## வெற்றியை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, நாடு முழுவதும் சட்டம், ஒழுங்கைப்பேணுவதற்கு ஆதரவளிக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலையைகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) மாலை 4 மணியுடன் வாக்குப்பதிவு முடிவடைந்ததை அடுத்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இறுதி தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுலில் காணப்படவுள்ளது.

தேர்தலுக்குப் பிந்தைய காலப்பகுதியிலும் ஒருவாரத்திற்குப் பிறகும் வாகன ஊர்வலங்கள் அல்லது பாதயாத்திரைகள் உள்ளிட்ட அனைத்து வகையான பொது அணிவகுப்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் எவ்வாறாயினும், அமைதியான முறையில் முடிவுகளைக் கொண்டாடுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். நாடு முழுவதும் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்குமாறு பொலிஸாரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமக்கள் இந்த விதிமுறைகளை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுவதோடு, அமைதிக்கு குந்தகம் ஏற்பட்டால் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல்களை உடன் வழங்குமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றார்.

அதற்கு அமைவாக, 119, 118, 107 (வடக்கு/கிழக்கு), 011 202 7149 அல்லது 011 201 3243 மற்றும் தொலைநகல் எண் 111 239 9104 ஆகிய இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## காலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனகுறித்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தல் எதிர்பாராத ஒரு மாற்றத்தை கொண்டு வர இருக்கிறது

## பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவித்தார்



நடைபெறுகின்றஜனாதிபதித்தேர்தல் எதிர்பாராத ஒரு மாற்றத்தை கொண்டு வர இருக்கின்றது. குறிப்பாக எந்த ஒரு வேட்பாளரும் 50 வீதத்துக்கு மேல் வாக்குகளை பெறக்கூடிய சாத்தியம் இல்லாமல் உள்ளது என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளர் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். தனதுவாக்கைப்பதிவுசெய்தபின்னர்ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ் மக்கள் தனித்துவமானவர்கள்.தனித்துவமானஒருசுயநிர்ணய உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான எந்த ஒரு தீர்வும் கடந்த எட்டு ஜனாதிபதிகளும் தரவில்லை. அதற்காக தமிழ் பொது கட்டமைப்பு என்ற அமைப்பு 83 சிவில் அமைப்புகளும் ஏழு தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து என்னை ஒரு பொது வேட்பாளராக சங்கு சின்னத்தில் போட்டியிட வைத்துள்ளார்கள்.

இந்த தேர்தல் முடிவானது வடக்கு கிழக்கு மக்கள் இணைந்த வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். என்கின்ற ஒரு செய்தியை இலங்கையில் ஆட்சி பீடம் ஏற இருக்கின்ற ஒன்பதாவது ஜனாதிபதிக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் அண்மை நாடாக இருக்கும் இந்தியாவிற்கும் ஒரு செய்தியை கொடுக்கக்கூடிய நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

நான் வடக்கு கிழக்கில் இருக்கின்ற எட்டு மாவட்டத்திற்கும் நேரில் சென்று தேரதல் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தேன். வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் மாத்திரமன்றி வடக்கு கிழக்குக்கு அப்பால் இருக்கின்ற தமிழ் மக்களும் எனக்கு வாக்களிப்பதற்காக அவர்களின் செய்திகளை தொடர்ச்சியாக தெரிவித்த வண்ணம் இருந்தார்கள்.

எனவே எனது சின்னத்துக்கு வாக்களிக்கின்ற அனைத்து உறவுகளுக்கும் நான் நன்றி அறிதலை தெரிவிப்பதற்கு கடமை பட்டு உள்ளேன். இந்தத் தேர்தல் முடிவுக்கு பின் அடுத்து வரும் மாற்றத்தின் அடிப்படையில் அந்தத் தேர்தல் முடிவு வெளிவர இருக்கின்றது.

இன்னிலையில் சில தீய சக்திகள் சில துண்டு பிரசுரங்களையும் அச்சிட்டு வெளியிட்டு இருக்கின்றார்கள். குறிப்பாக நான் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழரசு கட்சியிலே சேர்ந்த ஒரு சிலர் இந்த அடாவடித்தனமாக நான் இந்த தேர்தலில் இருந்து விலகி சஜித் பிரமதாஸவை ஆதரிப்பதாக ஒரு துண்டு பிரசுரமும், இன்னும் ஒரு துண்டு பிரசுரம் சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு முதலாம் இலக்கத்தையும் இரண்டாம் இலக்கத்தை எனது சங்கு சின்னத்துக்கு போடுமாறு அந்த துண்டுப் பிரசுரத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள்.

என்னை ஆதரிப்பவர்கள் சங்கு சிந்தனைத்துக்கும் மாத்திரமே வாக்களிக்க வேண்டும். நான் வேறு எந்த சிங்கள பேரினவாதிகளையும் என்னுடன் சேர்த்து அந்த பிரசாரம் செய்வதை வன்மையாக கண்டிக்கின்றேன்.

துண்டு பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கு வாக்குப் பலமோ ஆதரவோ இல்லை என்பது எனக்கு தெரியும். ஆனாலும் ஆதரவு பெருகி இருக்கின்ற தமிழ் பொது வேட்பாளராகிய என்னை மிகவும் கேவலப்படுத்துகின்ற விதத்திலும் எனது செல்வாக்கை குறைக்கின்ற விதத்திலும் இவ்வாறான விளம்பரங்கள் இவ்வாறான துண்டு பிரசுரங்கள் தொடர்ச்சியாக வருவதை எந்த ஒரு மக்களும் நம்ப வேண்டாம். இந்த துண்டு பிரசுரம் போடுபவர்கள் அனாமதேய பிரசாரங்களை மேற்கொண்டுபவர்களுக்கு தக்க பாடங்களை வருகின்ற தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எனவே வாக்களித்துவிட்டு தமிழ் உறவுகள் அனைவரும் வீடுகளிலேயே இருந்து முடிவை பார்க்குமாறும் நான் தயவாக கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எந்தவித தீய நடவடிக்கைகளிலும் பிரசாரங்களிலும் சச்சரவுகள் இல்லாமல் அமைதியாகச் சென்று தேர்தல் முடிவுகளை அவதானிக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் இதன்போது தெரிவித்தார்.(05)

# அமைதியாக செயற்பட்டு புதிய பாதையில் பயணிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைக

## ஜனாதிபதி ரணில் அழைப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் சனிக்கிழமை காலை கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று வாக்களித்தனர்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி –

அனைவரும் அமைதியாக செயற்பட்டு ஒன்றிணைந்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். – என்றார்.

இந்த நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையை நிறைவு செய்து, தேர்தலை நடத்துவதற்கான பின்னணியை தான் உருவாக்கியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நடைபெறும்



தேர்தல் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரத்தை கருத்தில் கொண்டு புதிய தலைமைத்துவத்தை பரிசீலிப்பதற்கு இது சரியான தருணம் என நம்புகின்றீர்களா என ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் தான் நாட்டின் பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக உரிமைகளைபாதுகாத்து தேர்தலை நடத்த முடிந்தமை குறித்து தாம்பணிவுடன்பெருமை கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தல் இலங்கையில் ஒரு திருப்புமுனை யாகவும், நாட்டை அழித்த பாரம்பரிய அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளில் இருந்து விலகி நாட்டில் புதிய சமூக மற்றும் அரசமைப்பை கட்டியெழுப்புவதற்கான பெறுமதியான சந்தர்ப்பம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டில் அமைதியான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடத்த முடிந்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தேர்தலில் பங்குபற்றிய அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் நன்றி தெரிவித்தார்.(05)



# பென்சிலால் குறி இடப்பட்ட வாக்கும் செல்லுபடியாகும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் வாக்குச் சீட்டுகளில் அடையாளமிடுவதற்கு பென்சில்களை பயன்படுத்த முடியாது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்தேர்தல்ஆணைக் குழு மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிதேர்தலில்வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்குச் சீட்டுகளில் அடையாளமிடுவதற்கு பென்சில்கள்பயன்படுத்தப்படுவதாகத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களும் வாக்குச் சீட்டுகளில் அடையாளமிடுவதற்கு பென்சில்களுக்கு மாறாகப் பேனாக்களைபயன்படுத்தவேண்டும்.

எவ்வாறிருப்பினும், பென்சில்களில் வாக்களிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகள் நிராகரிக்கப்படாது என தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# வாக்கெடுப்பு நிலையத்தில் மதுபோதையில் அநாகரிகமாகச் செயற்பட்டவர் கைதானார்

ஹோமாகம பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் மதுபோதையில் அநாகரீகமாக செயற்பட்ட நபரொருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்கெடுப்பு நிலையத்திற்குள் மதுபோதையில் சென்ற நபரொருவர் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு இடையூறு விளைவிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றத்தை நோக்கி...

தேர்தல் திருவிழா முடிந்துவிட்டது. இன்று மாலைக்குள் அதிகபட்சமாக இன்று இரவுக்குள் புதிய அரசுத் தலைவர் யார் என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டுவிடும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவே அடுத்த அரசுத் தலைவராகப் பதவியேற்பார் என்று வெளியாகி இருக்கும் முடிவுகளின் அடிப்படையிலும் எண்ணப்பட்டுவரும் வாக்குகளின் அடிப்படையிலும் எதிர்வுகூறப்படுகின்றது. அநுர 70 லட்சம் மக்களின் ஆணையைப் பெற்று அடுத்த அரசுத் தலைவராவார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த எதிர்வுகூறல்கள் அனைத்தும் உண்மையாகி அநுரகுமார திஸநாயக்க அரசுத் தலைவரானால் அது இலங்கையில் கடந்த 76 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றமாக அமையும். அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிப் பொறுப்பில் இருந்து மக்கள் விரட்டியடித்தபோது எதிர்பார்த்த மாற்றம் ஒன்றை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்திருக்கிறார்கள் என்று கருதிக்கொள்ளலாம்.

இதுவரையில் மாறி மாறி ஆட்சியில் இருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி அல்லது அதனலிருந்து பிரிந்த கட்சிகள் சுதந்திரக் கட்சி அல்லது அதலிருந்து பிரிந்த கட்சிகள் ஆகியவற்றின் மீது இலங்கைமக்கள்முற்றிலும்நம்பிக்கையிழந்துபோயிருக்கிறார்கள் என்பதன் வெளிப்பாடுதான் இந்த மாற்றத்தை மக்கள் நிகழ்த்தியதற்கான காரணம். இந்தக் கட்சிகளும் அவற்றின் அரசியலாளர்களும் தோற்றுப்போய்விட்டார்கள் என்று மக்கள் கணிக்கிறார்கள். அதனால் முற்றிலும் புதியவர்களான ஒரு தலைமுறையினரை அவர்கள் எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர்.

இலங்கையைக் கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்றிய தன்னால் மட்டுமே அதனைத் தொடர்ந்து அபிவிருத்தியை நோக்கி வழிநடத்திச் செல்லமுடியும் என்று ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்திய கருத்தை மக்கள் நிராகரித்துவிட்டார்கள். கடந்த காலத் தவறுகளுக்கு அவரும் பொறுப்பேற்கவேண்டியவர் என்ற அவர்களின் நினைப்பே அவர் நிராகரிக்கப்படுவதற்கான கரணமாக அமைந்துள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு இப்போது கிடைத்திருக்கும் மக்கள் ஆணை மிகப் பெரும் பொறுப்பு. அதன் மீதான மக்களின் எதிர்பார்ப்புக்களும் மிக அதிகம். தேசிய மக்கள் சக்தியின் அடிப்படையான ஜேவிபி தனது பழைய கொள்கைகளைக் கொண்ட கட்சியாக அல்லாமல் புதிய பொருளாதார, அரசியல் சிந்தனையுடன் பயணிக்கும் என்று அநுரகுமார தேர்தலுக்கு முன்னர்உறுதியளித்திருக்கிறார். அதற்கானஅணுகுமுறையையும் அவர் கடந்த காலங்களில் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார். அந்த வெளிப்பாடுகளுக்கான அங்கீகாரமாகவும்தான் அவர் மீது மக்கள் இப்போது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இருப்பினும் அவர் இப்போது ஏற்றிருக்கும் பொறுப்பு மிக மிக முக்கியமானது, கனதியானது. அதன் பொறுப்புணர்ந்து செயற்படுவதும் பிராந்திய மற்றும் பூகோள அரசியலுக்கும் உள்ளூரில் காணப்படும் இன அரசியலுக்கும் இடையில் அவர் மிகக் கவனமாகப் பயணிக்கவேண்டியவராக இருக்கின்றார். இனவாதத்தையும், இனப் பிரச்சினையையும் தமது அரசியலாக்கி வந்த கடந்த கால ஆளும் தரப்புக்களைப் போலன்றி இந்த விடயத்திற்கு விரைவில் ஒரு நிரந்தரத் தீர்வை அநுர பெற்றுத்தரவேண்டும் என்கிற பெரும் எதிர்பார்ப்பும் இருக்கின்றது. இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யவேண்டிய பொறுப்பும் இருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதாகவும் அதுவரையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்றும் அநுர உறுதியளித்திருக்கிறார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகவும் உறுதியளித்திருக்கிறார். அவற்றையும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றார்கள். அதற்கிடையில் பொருளாதார சீர்திருத்தத்தையும் அபிவிருத்தியையும் ஒட்டுமொத்த மக்களும் எதிர்பார்த்திருக்கின்றார்கள். இப்படிப் பலசவால்கள் கண்முன்னே இருக்கப் புதிய அரசுத் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள அநுர மக்களை ஏமாற்றாது நடந்துகொள்ளவேண்டும் என்பதே முக்கிய பொறுப்பு.

# ரணில், சஜித், அநுர, நாமல் தத்தமது பகுதியில் வாக்களிப்பு

## வெற்றியை அமைதியாகக் கொண்டாடவும் கோரிக்கை









ஜனாதிபதிவேட்பாளர்களானரணில்விக்கிரமசிங்க, அனுர குமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ச ஆகியோர் வாக்களித்தனர். வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுங்கள். வன்முறைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என பொதுமக்களிடம் வலியுறுத்தினார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றது. பெருமளவிலான மக்கள் ஆர்வத்துடன் காலை வேளையில் வாக்களித்தனர்.

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணி மைத்ரி விக்கிரமசிங்க ஆகியோர் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்தில் பொதுமக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாக்களிப்புக்கான வரிசையை நானே தோற்றுவித்தேன். அன்றைய ஸ்திரமற்ற நிலை நீடித்திருந்தால் வாக்களிப்பு இடம் பெற்றிருக்காது.

அமைதியான முறையில் தேர்தல் இடம்பெற்றது. புதியபயணத்தைநோக்கிசெல்வோம். வன்முறையற்ற வகையில் அமைதியாக செயற்படுங்கள். போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க வாக்களித்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,இலங்கை அரசியல் வரலாற்றை மாற்றியமைக்கும் தேர்தலாக இந்த தேர்தல் காணப்பட்டது. இலங்கையில் காலம் காலமாக அரசாங்கத்தையும், ஆட்சியாளர்களையும் மாற்றுதற்கு தேர்தல் இடம்பெற்றுள்ளது.

இந்த தேர்தல் தான் முறைமை மாற்றத்துர்க்காக இடம்பெற்றுள்ளது. வெற்றியை அனைவரும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். ஜனநாயக ரீதியில் தமது விரும்பும் அரசியல் தரப்பினருக்காக செயற்படவும், வாக்களிக்கவும் அனைவருக்கும் உண்டு அதனை பாதுகாக்க வேண்டும்.

நாட்டுக்கு புதிய அரசியல் கலாச்சாரம் அவசியம்.வெற்றி யாருடையதாக இருந்தாலும் அதனை அமைதியாகவும், வன்முறையற்ற வகையிலும் கொண்டாட வேண்டும் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமாச மற்றும் அவரது பாரியாரான ஜலனி பிரேமதாச ஆகியோர் ராஜகிரிய பகுதியில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயகமுறையில்தேர்தல்இடம்பெற்றது.ஆகவே ஜனநாயக அம்சங்களை பாதுகாக்க வேண்டியவது அவசிமானது. வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுங்கள். வன்முறையற்ற சூழலை தோற்றுவிக்கும் பொறுப்பு அனைத்து அரசியல் தரப்பினருக்கும் உண்டு என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வீரகெடிய மெதமுல்ல வித்தியாலயத்தில் வாக்களித்தன் பின்னர், யாருக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். மக்களாணையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமைதியான முறையில் வெற்றியை கொண்டாட வேண்டும் என்றார்.

# தனது வாக்கை அளித்தார் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன்



ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக சனிக்கிழமை காலை 06.45 மணியளவில் திரியாய் பிள்ளையார் கோவிலில் வழிபட்டு விட்டு திருக்கோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் திருக்கோணமலைத் தொகுதியில் உள்ள தனது கிராமமான திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

இந்த வாக்குச் சாவடியில் முதலாவது வாக்காக தனது வாக்கை அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# சுரேஸ் கட்டப்பிராயில் வாக்களிப்பு



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இன்றைய தினம் தன்னுடைய வாக்கினை கட்டப்பிராய் சனசமூக நிலையத்தில் காலை 10 மணியளவில் செலுத்தினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சஜித், அரியம், ரணிலுக்கு மாவையர் வாக்களித்தார்

யாழ்.மாவிட்டபுரம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தமது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபயை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மாவிட்டபுரம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தமது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

கட்சி முடிவுப்படி சஜித் பிரேமதாசவுக்குத் தனது முதல் வாக்கையும் அரியநேத்திரனுக்கு இரண்டாவது வாக்கையும் ரணிலுக்கு மூன்றாவது வாக்கையும் தான் அளித்தார் என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



# வாக்காளர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்திய நுவரெலிய வாக்களிப்பு நிலையம்

நுவரெலியா - மஸ்கலியா தேர்தல் தொகுதியில் நோர்வுட் நியுவெளி இலக்கம் 205 வாக்களிப்பு நிலையமானது வாக்காளர்களுக்கு பல விதங்களிலும் அசௌகரியத்தை ஏற்படுத்திய ஒன்றாக விளங்கியுள்ளது. நியுவெளி தோட்டத்தின் பழைய தேயிலை தொழிற்சாலையே இப்பகுதியின் வாக்களிப்பு நிலையமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொழிற்சாலையின் மேற்பகுதியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் இரும்பிலான படிக்கற்களில் வாக்காளர்கள் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டதையும், வயதான வாக்காளர்கள் சிலர் இப்படிக்கற்களில் ஏற முடியாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் வாக்களிப்பு நிலையத்தின் உட்புறம் மிக குறுகியதாக இருப்பதால் தாம் பணிகளை மேற்கொள்ள சிரமங்களை எதிர் கொண்டதாக மேற்படி வாக்களிப்பு நிலைய சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் உட்பட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாரும் தெரிவித்தனர்.

(05)

# வாக்களித்தார் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன்

தமிழ் பொதுக் கட்டமைப்பின் கீழ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்ற பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் மட்டக்களப்பு அம்பிளாந்துறை முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், மட்டு. அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் தமது வாக்கினைப் பதிவு செய்தார்.

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதற்காக காலை 7 மணி முதல் தமது வாக்குகளை மக்கள் பதிவு செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஜனாதிபதித் தேர்தலுக்காக மக்கள் அமைதியான முறையில் வாக்களித்து வருகின்றனர். (05)

# வாக்குச்சீட்டை கிழித்தவர் நாயன்மார்கட்டில் கைது

யாழ்ப்பாணத்தில் வாக்களிக்க வந்த இளைஞர் ஒருவர் வாக்குச்சீட்டை கிழித்ததால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் சனிக்கிழமை வாக்களிக்கச் சென்ற இளைஞர், தனது வாக்காளர் அட்டையை காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்குச்சீட்டினை கைகளில் பெற்ற பின்னர், வாக்களிக்காமல், வாக்குச்சீட்டைக்கிழித்துள்ளார்.

அதனை அங்கிருந்த அதிகாரிகள் கவனித்து, பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, பொலிஸார் இளைஞரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின்போது, அந்த இளைஞர் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதல் தடவை எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# அங்கஜன் வாக்களிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் உள்ள அளவெட்டி, சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தமது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமை, துன்கிந்த, ஈராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் சாவு

பொலன்னறுவை, புலஸ்திபுர பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடீரென சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

எச்.எம் இரத்னபால என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் புலஸ்திபுர பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த போது திடீரென சுகவீனமுற்றுள்ள நிலையில் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




# நாம் ஆதரிக்கின்ற வேட்பாளர் நிச்சயமாக வெற்றி பெறுவார்

## சாணக்கியன் நம்பிக்கை



நிச்சயமாக நாம் ஆதரிக்கின்ற வேட்பாளர் வெற்றி பெறுவார் என்கின்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இதனை தமிழ் மக்கள் மிகவும் ஒரு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பட்டிருப்பு (களுவாஞ் சிக்குடி) மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களுக்கு உரிய நிலையான அரசியல் தீர்வையும் சாதகமாகவும் காணப்படுகின்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அவர்களையே தமிழரசு கட்சி ஆதரிக்கின்றது.

சஜித் பிரேமதாஸவின் பேச்சுக்கு முதல் பேச்சாக என்னுடைய பேச்சு கடந்த பிரசார மேடையில் அமைந்திருந்தது. இதன் மூலம் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கடந்த கால அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினோம். ஆனால், ஜனாதிபதி தேர்தல் குறிப்பாக இனவாதத்தை அடிப்படையாக வைத்து ஜனாதிபதியின் தீர்மானிக்கின்ற ஒரு நிலைமை காணப்பட்டது. இருப்பினும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி தேர்தல் மேடையில், இறுதி தேர்தல் மேடையில் தமிழரசு கட்சியின் சார்பாக நான் அங்கு உரையாற்றி இருந்தேன்.

இதன் மூலம் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் ஒட்டுமொத்த இலங்கையிலும் திசைதிரும்பிப் பார்க்கின்ற ஜனாதிபதி தேர்தலாக இது அமையப் பெற்றுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெறுவதற்கு பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன் என அவர் தெரிவித்தார்.

(05)

# 106 வயதில் தனது வாக்கை பதிவுசெய்த திருமலைவாசி

திருகோணமலை மாவட்டத்தின் மூத்த குடிமகன் ஒருவர் தனது 106 வயதில் தனது வாக்கினை பதிவு செய்திருந்தார்.

திருகோணமலையின் மூத்த பிரஜையான ஜோன் பிலிப் லூயிஸ் (வயது 106) நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தனது வாக்கினை சனிக்கிழமை காலை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் பதிவு செய்திருந்தார்.

நாட்டில் இதுவரை காலமும் குறிப்பாக ஒன்பது தடவையாக இடம்பெறுகின்ற ஜனாதிபதி தேர்தலில் தனது வாக்கினை பதிவுசெய்ததாகவும் நல்லதோர் ஆட்சியாளர் வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தனது வாக்கினை அளித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இறைவனது ஆசியுடன் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தலிலும் வாக்களிக்க தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# ஒரு சில ஜனாதிபதி வேட்பாளர்களின் செயற்பாடு குறித்து பஃவ்ரல் அதிருப்தி

ஒரு சில ஜனாதிபதி வேட்பாளர்களின் செயற்பாடுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கவையென தேர்தலை கண்காணிக்கும் அமைப்பான பஃவ்ரல் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் செயற்பட வேண்டும் என்பதை பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் வலியுறுத்துகிறோம் என்றும் பஃவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.(05)



# அமைதியான வாக்களிப்பு

## ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் அமைதியான முறையில் வாக்களிப்பு இடம்பெற்றதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள்சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று (சனிக்கிழமை) காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் 35 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ரணில் வென்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படாதென்கிறார் திலீபன்



ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் ஒன்றரை வருடங்களுக்கு நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்பதில் நம்பிக்கை உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்தார்.

நேற்று வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

மேலும் கருத்து தெரிவித்த அவர் -

மக்கள் அதிக அளவில் வாக்கு அளிப்பதில் ஆர்வம் கொண்டு செயல்படுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க வெல்வதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் நாடாளுமன்றம் ஒன்றரை வருடங்களுக்குக் கலைக்கப்படாது எனவும் தெரிவித்தார்.(05)

# திருகோணமலை மாவட்டத்தில் வாக்குபெட்டி விநியோகம் நிறைவு



திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளையும் களுக்கான வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.



அதிகாரிகளையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கை நேற்று காலை முதல் மாலை வரை ; இடம்பெற்றது.

அத்தோடு, திருகோணமலையில் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரி செயற்படவுள்ளது.

மொத்தமாக 318 வாக்களிப்பு நிலையங்

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் 315,925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடெங்கும் மிகதுரிதமாக இடம் பெற்று வருகின்றன.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# வாக்கெடுப்பு நிலையம் அருகில் சட்டவிரோதமாக வேட்பாளர் கையேடுகளைப் பகிர்ந்தவர் கைது

கலபிட்டமட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வாக்கெடுப்பு நிலையம் ஒன்றுக்கு அருகில் சட்டவிரோதமாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு சார்பான வேட்பாளர் கையேடுகளை பகிர்ந்த சந்தேக நபரொருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கலபிட்டமட பொலிஸார் தெரிவித்தனர்.

இம்புல்கொடைபிரதேசத்தைச்சேர்ந்த51வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அந்த வாக்கெடுப்பு நிலையத்துக்கு சுமார் 500 மீற்றர் தொலைவில் பொதுமக்களுக்கு வேட்பாளர் கையேடுகளைப் பகிர்ந்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாருக்குகிடைத்ததகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பிணையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கலபிட்டமட பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# ஊழல்வாதிகள் அகற்றி அரசியலுக்குள் புதிய தலைமுறை உள்வாங்கப்படட்டும்

## வேட்பாளர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

ஊழல்மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் அகற்றப்பட்டு புதிய தலைமுறையினர் அரசியலுக்குள் உள்வாங்கப்பட வேண்டும்என்றுஜனாதிபதிவேட்பாளர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்றுநடைபெற்றநிலையில், வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு வங்குரோத்து அடைந்ததன் பின்னர் நடைபெறுகின்ற தேர்தலாக இருப்பதோடு, வாக்காளர்கள் புத்திசாலித்தனமாக செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இந்தத்தேர்தலுடன்இந்தநாட்டுக்குசாபக்கேடாகவுள்ள ஊழல் மோசடி மிக்க அரசியல் முறைமை முழுமையாக களையப்பட வேண்டும். அதேபோன்று ஊழல்மோசடிகளுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்கள் அரசியலில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

நாடு புதிய பாதையில் பயணிப்பதற்கும், புதிய தலைமைமுறையினருடன் இணைந்து செல்வதற்கும் நாம் உரிய திட்டத்தினை வகுத்துள்ளோம். இந்த தேர்தலுக்குப் பின்னரும், ஏனைய தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அவற்றிலும் நாம் எமது ஆதிக்கத்தினைச் செலுத்துவதற்குள்ளோம். புதிய தலைமைமுறையினர் என்றுநான்குறிப்பிட்டது,துறைசார்ந்தநிபுணத்துவத்தினை உடைய கற்றவர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்டவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி சட்டம் ஒழுங்கியை பின்பற்றி நிதியை நிலைநாட்டுபவராகவும் பாராளுமன்றமம் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் இருத்தல் அவசியமானது. ஜனாதிபதி நீதியைக் கடைப்பிடிக்காது விலகாத பட்சத்தில் பாராளுமன்றம் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான சக்தியைக் கொண்டிருக்க வேண்டும் என்றார்.

# நாட்டைவிட்டு வெளியேறும் அவசியம் ஏதுவும் இல்லை

## நாமல் தெரிவிப்பு

வெற்றிபெறவுள்ள தேர்தலிற்கு முன்னர் நான் நாட்டைவிட்டுவெளியேறவேண்டிய அவசியமில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வெற்றிபெறவுள்ள தேர்தலிற்கு முன்னர் வெற்றிபெறும் மனோநிலையில் உள்ள நான் நாட்டைவிட்டுவெளியேறவேண்டிய அவசியமில்லை என தேர்தலில் வாக்களித்த பின்னர் தெரிவித்துள்ளார்.

சாதிக்க முடியாத எதனையும் உள்ளடக்காத தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். மக்களிற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்,என தெரிவித்துள்ளநாமல்ராஜபக்சநாட்டின்அரசியல்கலாச்சாரம்மாற வேண்டும்,என தெரிவித்துள்ளார்.

நாங்கள் அச்சத்தினால் பின்வாங்கும் அரசியல் சக்தியில்லை,நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை காணப்பட்டிருந்தால் நாங்கள் எப்போதோ நாட்டிலிருந்து வெளியேறியிருப்போம்,நாடு பேரழிவுகளைசந்தித்தபோதிலும்,நாங்கள்நாட்டிலிருந்து வெளியேறவில்லை ஆனால் பல அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்கள் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் வாக்களித்தார்



திருகோணமலைமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிண்ணியா ஜொஹறா உம்மா வித்தியாலயத்தில் தனது வாக்கினை அளித்தார்.

இலங்கையின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கானவாக்களிப்புநடவடிக்கைகள் சனிக்கிழமை காலை 07 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 4 மணிவரை இடம்பெற்றது. (05)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்



நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் நேற்று தனது வாக்கினை பதிவு செய்தார்.

9ஆவதுநிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினரான சாணக்கியன் வாக்களித்தார். (05)

# இலங்கையின் வரலாற்றிலேயே இம்முறை அமைதியான தேர்தல்

## தேர்தல் ஆணையாளர் பெருமிதம்

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல்என2024ஜனாதிபதிதேர்தல் பதிவு செய்யப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எந்தவன்முறையும்இடம்பெறாத மிகவும் அமைதியான தேர்தல் இதுவென அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# இலங்கையின் மிகவும் அமைதியான தேர்தல்

## அலிசப்ரி தெரிவிப்பு

இலங்கையின் மிகவும் அமைதியான தேர்தலை நாங்கள் பார்த்துள்ளோம் என வெளிவிவகார அமைச்சர்அலிசப்ரிதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

2022 பொருளாதார நெருக்கடி முதல் நாங்கள் பார்த்த அனைத்திற்கும் அப்பால் இலங்கையர்கள் ஒன்றிணைந்து பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் கட்டியெழுப்பியுள்ளமை உண்மையிலேயே உத்வேகம் அளிக்கும் விடயம்.

சுதந்திரமான நியாமான தேர்தலை நடத்துவதற்கான பணியாற்றிய அனைவருக்கும் நன்றியுடையவர்களாக உள்ளேன்.

மக்களின் குரல் எந்தவித அச்சமும் விருப்பு, வெறுப்புமின்றி செவிமடுக்கப்பட்டுள்ளது.

(05)

# ஜயவர்தனபுர பல்கலை செவ்வாயன்று திறப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்கல்விநடவடிக்கைகளுக்காக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படும் என உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் எம்.மனேஜ் தெரிவித்துள்ளார்.

இதனால், அனைத்து மாணவர்களும் திங்கட்கிழமை தங்களது விடுதிகளுக்கு வருமாறு பேராசிரியர் பத்மலால் எம்.மனேஜ் குறிப்பிட்டுள்ளார்.

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து கடந்த 12ஆம்திகதிமாலை6.00மணிமுதல் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்நிலையில், அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தை விட்டுவெளியேறுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. (05)

# மதுபோதையில் தேர்தல் பணி செய்த சாரதி தெரணியகலையில் கைது

தெரணியகலை பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு பணியாளர்களைஅழைத்துச்சென்ற வான் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக வாக்குச் சீட்டுகள், வாக்குப்பெட்டிகள் மற்றும் பணியாளர்களை தெரணியகல பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்ற வான் சாரதி ஒருவர் கடமையின் போது குடிபோதையில் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, வாக்குச் சீட்டுகள், வாக்குப்பெட்டிகள் மற்றும் பணியாளர்களைவேறுவாகனத்தில் கொண்டு செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# மட்டு. வவுணதீவு பகுதியில் இரு கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

விளாவட்டவான் கிராம சேவகர் பிரிவில், யாட் வீதியில் உள்ள காணி அருகில் இருந்து இக் குண்டுகள் மீட்கப்பட்டன என தெரியவருகிறது.

வெள்ளிக்கிழமைபொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக இவ் இரண்டு கைக் குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தாண்டியடி விஷேட அதிரடிப்படையினர் குறித்த இரண்டு குண்டுளையும் மீட்பதற்காக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ரணிலின் ஆட்சி தொடர்ந்தால்தான் வளர்ச்சியை தொடரவதற்கு முடியும்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்ந்தால் தான் கடந்த இரண்டு வருட வளர்ச்சியை முன்கொண்டு செல்ல முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9 ஆவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்நேற்றுநடைபெற்றநிலையில், யாழ்ப்பாணம் நாவலர்கலாச்சாரமண்டபத்தில்அமையப்பெற்றுள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்ததன் பின்னர் ஊடகவியலாளர்கள்மத்தியில்உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஆட்சி தொடர வேண்டும். அப்போதுதான் கடந்த இரண்டு வருட வளர்ச்சியைத் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல முடியும்.

கடந்த சிலவருடங்களுக்கு முன்னர் நாடு மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சியைக் கண்டிருந்தது. அப்போது எவரும் நாட்டை பொறுப்பேற்கமுன்வராதநிலையில்தற்துணிவுடன் பொறுப்பேற்று நாடு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பச் சிறப்பாக வழிநடத்தியிருந்தார்.

அதனால்அவரது வெற்றி இம்முறை நாட்டுக்கு அவசியமாகின்றது என்றும் சுட்டிக்காட்டிய அவர் நாட்டு மக்களும் அவரை வெற்றியடையச் செய்ய அணிதிரண்டுவாக்களித்து வருகின்றனர் என்றார்.

# யார் ஜனாதிபதியானாலும் அவருக்கு என் ஆதரவுண்டு

## மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு

எவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டாலும் அவருக்கு ஆதரவளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்களிற்காக அரசு 40 பில்லியன் ரூபாயைச் செலவிடவேண்டும் என்பதால் புதிய ஜனாதிபதி பல சவால்களை எதிர்கொள்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலிற்கான செலவு மாத்திரம் பத்து பில்லியன் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மாகாண சபைகள், உள்ளூராட்சி தேர்தல்களிற்காக மேலும் பத்து பில்லியனை செலவிடவேண்டியிருக்கும் என தெரிவித்துள்ளார்.

இந்த செலவுகளுடன் புதிய ஜனாதிபதி பொருளாதாரத்தை கையாள்வது பொதுமக்களிற்கு சேவைகளை வழங்குவது போன்றவற்றில் பெரும் சவால்களை எதிர்கொள்வார் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை ஆனால் தேர்தல்களில் போட்டியிடுவதில்லைஎனதீர்மானித்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் பெரிய பாலத்தடி விபத்தில் ஒருவர் காயம்

மன்னார் பெரிய பாலத்தடியில் மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபர் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது.

விபத்து நடைபெற்ற இடத்தில் காணப்படும் உந்துருளியை போக்குவரத்து பொலிஸார் பார்வையிட்டு சென்றுள்ளனர்.

(05)

# தீயில் கருகி மூதாட்டி யாழ்ப்பாணத்தில் சாவு



யாழ்ப்பாணம் நீர்வேலியில் வயோதிப பெண்ணொருவர் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

தனிமையில் வசித்து வந்த 65 வயதுடைய குறித்த பெண்ணின் வீடு தீக்கிரையாகியுள்ளது. இதனால் வீட்டிலிருந்த குறித்த பெண்ணும் எரிந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டில்இருந்தகேஸ்சிலிண்டர்கள் வெளியே வீசப்பட்டுள்ள நிலையில் வீடுதீப்பற்றிஎரிந்துள்ளது. அத்துடன் வீட்டின் வாசலிலே சமையலுக்கு பயன்படுத்தப்படும் மிளகாய் தூள் வீசப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் யாழ்ப்பாண மாநகர சபையின் தீயணைப்புபடையினர், விரைந்து தீயைக் கட்டுப்படுத்தினர். தடயவியல் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டுக்கு யாராவது தீ வைத்திருக்கலாமா அல்லது காஸ் சிலிண்டர்கள் வெடித்து வீடு எரிந்து இருக்கலாமா என்ற கோணத்தில் கோப்பாய் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2024இல் வெளியிடப்பெற்றது